**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 09 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதிநிலைமைக் கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் திரண்ட நிதிய பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிராமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்காக திறைசேரிச் செயலாளரினாலும் கமத்தொழில் அமைச்சுச் செயலாளரினாலும் 1994 மார்ச் 09 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள பொறுப்பு உடன்படிக்கையின் பிரகாரம் ''கொவிசெத'' லொத்தர் வருமானத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த சதவீதமும் அப் பணத்தினை முதலீடு செய்ததிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்தை விவசாயிகளின் அபிவிருத்தி மற்றும் சேமநலன் உட்பட 06 நோக்கங்கள் எய்தப்படுவதற்கு பயன்படுத்தப்படுவதற்கான நிர்வாக நடவடிக்கைகளுக்காக நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.3 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதியங்களைப் பேணுவதற்கு நியாயாமான காரணம் இருப்பின் அத்தகைய நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்கப்படுவதற்கு இயலுமான வகையில் அரச நிதித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை பாராளுமன்ற அதிகாரச் சட்டமொன்றினால் சட்டரீதியாக்குவதற்கு 2013 திசெம்பர் 31 வரையிலும் முடியாதிருந்தது.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) நிதிக்கூற்றுக்களில் திறைசேரியிலிருந்து பெறவேண்டிய ''கொவிசெத'' லொத்தர் வருமானமாகக் காண்பிக்கப்பட்ட தொகை ரூபா 1,291,557,399 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| காலம் | பெறவேண்டிய வருமானம் |
|---|---|
| | ரூபா |
| 1 ஆண்டிற்குக் குறைவானது | 196,220,108 |
| 1 – 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை | 405,657,200 |
| 3 – 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை | 101,705,057 |
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 587,975,034 |
| மொத்தம் | 1,291,557,399 |

மேற்குறித்த தொகை திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதற்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிராததுடன் இலங்கை குடியரசுக் கணக்கில் அத் தொகை பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிராமையால் அப் பெறுமதியும் நிலைப்பாடும் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ii) குறுங்காலக் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 8 ஆண்டுகளுக்கு மேலான காலங்கடந்த 08 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 113,110,371 தொகையாகக் காணப்பட்டது.

(iii) முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்படும் ரூபா 6,428,742 தொகையான 03 மீதிகள் 06 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக தீர்க்கப்படாதிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்ட ரூபா 537,984 தொகையான 02 பொறுப்பு மீதிகள் மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதி அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இல்லாத காரணத்தினால் உள்ளபடியாக நிலவுவதையும் அதன் பெறுமதி சரியெனவும் கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

| | | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய குறுங்காலக் கடன் | | | |
| | (i) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) | 7,923,175 | பட்டோலைகள் |
| | (ii) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - சுழற்சி நிதியம் | 44,255,850 | பட்டோலைகள் |
| (ஆ) | பெறவேண்டிய நீண்டகாலக் கடன் விவசாய வங்கிக் கடன் | | 9,112,579 | பட்டோலைகள் |
| (இ) | நடைமுறையல்லா பொறுப்புகள் விவசாயிகளின் வைப்புகள் | | 697,644 | பட்டோலைகள் |

**2.2.4 இனங்காணப்படாத சொத்துக்கள்**

நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சேமிப்பு வங்கிக் கணக்கு மீதி ரூபா 7,241,655 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதி இனங்காணப்படுவதற்காக வங்கிக் கணக்கிலக்கம், வங்கிப் புத்தகம், மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் ஆகிய எவ்வித ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 228,098,352 தொகையான மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 151,447,614 ஆகக் காணப்பட்டமையால் நிதிவிளைவுகளில் ரூபா 76,650,738 தொகையான தேறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 45,840,229 ஆல் அதிகரித்தமையும் செலவினம் ரூபா 30,810,509 ஆல் குறைவடைந்தமையும் இவ் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டின் நிதியத்தின் நிதி விளைவுகள் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டில் நிலவிய நிலைமையுடன் ஒப்பிட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | **2013** | **2012** | **வேறுபாடு சதவீதமாக அதிகரிப்பு/ (குறைவு)** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| **குறித்த பணி** | | | |
| ‘‘கொவிசெத’’ லொத்தர் வருமானம் | 196,220,108 | 162,211,860 | 21 |
| வட்டி வருமானம் | 116,914,876 | 104,748,395 | 12 |
| நானாவித வருமானம் | 375,000 | 710,000 | (47) |
| மொத்த குறித்த பணி | 313,510,484 | 267,670,255 | 17 |
| **செலவினம்** | | | |
| அபிவிருத்திச் செலவினம் | 83,665,076 | 114,379,705 | (26) |
| ஏனைய செலவினம் | 1,747,056 | 1,842,936 | (5) |
| மொத்த செலவினம் | 85,412,132 | 116,222,641 | (26) |
| மொத்த மிகை | 228,098,352 | 151,447,614 | 50 |
| வருமான வரி ஏற்பாடு | (2,280,984) | 1,514,476) | |
| மிகை | 225,817,368 | 149,933,138 | 51 |

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போதும் 2013 ஆம் ஆண்டின் போதும் மொத்த வருமானத்தில் அபிவிருத்திச் செலவினம் முறையே 18 சதவீதமாகவும் 27 சதவீதமாகவும் இருந்ததுடன் இது ''கொவிசெத'' லொத்தர் வருமானம் தவிர்ந்த ஏனைய வருமானத்தில் முறையே 46 சதவீதமாகவும் 71 சதவீதமாகவும் காணப்பட்டது. பாதீடு தயாரிக்கப்படுகையில் ஆண்டின் ''கொவிசெத'' லொத்தர் வருமானத்தில் அபிவிருத்திச் செலவினமும் முதலீடு செய்யப்படுவதற்காக பணத்தைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் ''கொவிசெத'' வருமானத்திலிருந்து பணம் பெறப்பட்டிராமையால் மதிப்பிடப்பட்ட மொத்த அபிவிருத்திச் செலவினமும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

#### முற்பணம் தீர்க்கப்படுவதிலான தாமதங்கள்

(அ) 04 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகையான ரூபா 10,151,772 அச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நீண்ட காலதாமதத்தை அடுத்து தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 05 அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ரூபா 75,663,882 தொகையான முற்பணம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் ரூபா 4,470,488 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

மீளாய்வாண்டின் 10 மாதங்களும் நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 3 மில்லியனுக்கு மேலாக நிலவியதுடன் இதில் 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10 மில்லியன் தொகையான மீதிக்கு மேற்பட்டிருந்தமையால் நிதியத்தின் நிதிப் பயன்பாட்டின் பிரகாரம் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் காணப்பட்ட போதியளவான கணக்கீட்டு வழுக்கள் காரணமாக 2014 மார்ச் 13 ஆம் 2014 மே 23 ஆகிய இரு சந்தர்ப்பங்களின் போது அந் நிதிக்கூற்றுக்கள் மீளப் பெறப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) நிதியத்தின் பாதீட்டின் படி 09 விடயங்களின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 69,735,000 ஆனதுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 20,752,047 ஆனமையால் பாதீட்டுப் பதிவேடு திருப்திகரமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு உபகரணமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியத்தின் பாதீட்டின் படி ரூபா 13,253,540 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 06 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீடு மீளாய்வாண்டின் தொங்கல் செலவினத்திற்கான ஏற்பாடாக ரூபா 20 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் தொங்கல் செலவினத்திற்கான ஏற்பாடு ரூபா 4 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இத் தொங்கல் செலவினத்திற்கான ஏற்பாட்டில் ரூபா 10.25 மில்லியன் தொகை பாதீட்டில் உள்ளடக்கபட்டிராத 08 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தன.

**5.3 வருடாந்த அறிக்கை அவையில் சமர்ப்பித்தல்**

திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. பீ.எப்/423 இன் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கடன் வழங்கல் மற்றும் கடன் அறவீடு
(இ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்
(ஈ) நிதியப் பயன்பாடு